IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No. 121/2006
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 01.25 PM.

<u>வா.சா. 1 சாட்சி முருகேசன் த.பெ.பிச்சை</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 26.08.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது அப்பா மற்றும் ஒரு அத்தை ஆகும். எனது தாத்தா இருளப்பத்தேவருடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 4 பேர் ஆகும். அவர்கள் யார் என்றால் முருகான்டித்தேவர், தனிக்கொடி, சுப்பிரமணியம் மற்றும் எனது தாத்தா ஆகும்.

2. நிலவுடமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முன்பு குராயூர் வருவாய் கிராமம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். UDR திட்டத்திற்கு பின்புதான் குராயூர் வருவாய் கிராமம் குராயூர் பிட் 1 மற்றும் 2 ஆக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். UDR க்கு முன்பு வழக்கு சொத்து என்ன புல எண்ணுக்கு கட்டுப்பட்டது என்றால் தெரியாது.

3. UDR க்கு பின்பு வழக்கு சொத்து என்ன புல எண்ணுக்கு கட்டுப்பட்டது என்றால் தெரியாது. நத்தம் செட்டில்மெண்டு காலக்கட்டத்தில் வழக்கு சொத்து என்ன புல எண்ணில் கட்டுப்பட்டது என்றால் தெரியாது. எத்தனை இலக்க சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் எத்தனை இலக்க

சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தேன்.

4. மேற்படி 3 இலக்க சொத்திற்கும் அடையாளம் காண்பிக்ககூடிய புல எண் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. நான் குடியிருக்கும் வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் யார் குடியிருக்கிறார்கள் என்றால் சின்த்தேவர் மகன் பிச்சை குடியிருக்கிறார். சின்த்தேவர் மகன் பிச்சை தேவர் மகன் நேர் கிழக்காக யார் உள்ளார் என்றால் சின்த்தேவர் மகன் பிச்சை உள்ளார். வடக்கு பக்கம் யார் உள்ளார் தெரியாது.

5. நான் எத்தனை வருடங்களாக குராயூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்ததிலிருந்து குடியிருந்து வருகிறேன். சின்த்தேவர் மகன் பிச்சைத்தேவர் நேர் வடக்காக சேனாதிபதி மகன் பெரிய சாமி என்பவர் இடம் உள்ளது. பெரியசாமித்தேவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. பெரியசாமித்தேவர் குடியிருக்கும் இடத்தில் தற்போது தங்கமாரி குடியிருந்து வருகிறார்.

6. தங்கமாரிக்கு கிழக்கு நேராக யார் உள்ளார் என்றால் தங்கமாரிதான் புலங்கி குடியிருந்து வருகிறார். சின்த்தேவர் மகன் பிச்சைத்தேவருக்கு வாரிசுதாரர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். பிச்சைத்தேவருக்கு சங்கர் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கு மேற்கு பக்கம் தென்வடலாக செல்லக்கூடிய தெரு உள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி தென்வடல் தெருவான வருவாய் ஆவணங்களில் புல எண்.214/2 என்றால் சரிதான். எனது தகப்பனார் குடியிருந்து வரும் பகுதிக்கு வருவாய்துறையிலிருந்து பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் சர்வே எண்.214/21 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ4 ஆவணமானது 2005ம் வருடம் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் சர்வே எண்.214/21க்கு பழைய புல எண்.4/1 என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய புல எண் 4/1 னின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. சர்வே எண்.4/1 னின் மொத்த விஸ்தீரணம் 32 ஏக்கர் 34 செண்டு உள்ளது என்றால் தெரியாது.

9. வா.சா.ஆ.4 ன் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ4 ஆவணத்தில் யார் யாருக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் பெரியகருப்பத்தேவர் பெயரில்தான் உள்ளது. வா.சா.ஆ. 4 பட்டா ஆவணம் பெரியகருப்பத்தேவர் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

10. 21.04.1964ம் தேதி எனது அப்பா பிச்சைத்தேவரும், முருகாண்டித்தேவர் மகன் சொக்கலிங்கதேவரும் சேர்ந்து நாராயண அய்யங்காரிடம் இருந்து ஒரு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தில் புல எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் புல எண் உண்மையில் குறிப்பிடப்படவில்லை என்பதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் புல எண் குறிப்பிடப்படாத நிலையில் வழக்கு சொத்திற்கு பொறுந்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணமானது எனது தாத்தா இருளப்பத்தேவர் என்பவரால்

06.06.1955 ம் வருடம் வா.சா.ஆ2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ2 ஆவணத்திலும் புல எண் குறிப்பிடப்படாததால் வழக்கு சொத்திற்கு பொறுத்தமுடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ6 ஆவணம் ஜெகநாத அய்யங்காருக்கு கிருஷ்ண அய்யங்காரும் அவருடைய வாரிசுகளும் சேர்ந்து எழுதிகொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ6 ஆவணத்தில் 2 இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டு மேற்படி 2 இலக்க சொத்திற்கும் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ6 ஆவணமும் வழக்கு சொத்திற்கு பொறுந்தக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 08.04.1944ம் தேதி நாராயண அய்யங்காருக்கு கிருஷ்ண அய்யங்கார் மற்றும் இராமனுஜ அய்யங்கார் வாரிசுகள் சேர்ந்து கிரையம் கொடுத்ததாக வா.சா.ஆ3 ல் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ. 3 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணம் மூலமாக எனக்கோ, எனது மூதாதையருக்கோ உரிமை மாற்றம் செய்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எனது அப்பா என்ன பரிகாரம் கேட்டு 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதி எங்கள் சொத்து அவர் சொத்து என்பதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

15. வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் உண்மையில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் கேட்டுள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வழக்கு சொத்தில் குடியிருந்து வீட்டு வரி செலுத்தி வந்தார் என்பதற்கு ஆதரவாக வா.சா.ஆ5 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

16. எனது தகப்பனார் குடியிருந்து வந்த வீட்டிற்கு ஆரம்பத்தில் கதவு எண் என்ன என்றால் நினைவில்லை. வழக்கு சொத்து விபரத்தில் எனது தந்தை பெயரில் வீட்டு வரி இரசீது கதவு எண் குறிப்பிட்டு செலுத்தப்பட்டு வந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு வழக்கு 1வது இலக்க சொத்து விபரத்தில் குறிப்பிடாமல் குறிப்பிட்டுள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17. நான் குடியிருந்து வரும் வீடு அதற்கு அடுத்து தென்புறம் காலி இடம் அதற்கு அடுத்து தென்புறம் பிரதிவாதி வீடு என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட பொது சந்து உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பொது சந்து வருவாய் ஆவணங்களில் புல எண்.214/22 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

18. நாங்கள் பொது சந்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தோம் என்றும் அதற்கு பிரதிவாதிகள் இடைஞ்சலாக இருந்ததால் அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. உறுத்துக்கட்டளை பரிகாரம் என்பது 1ம் பிரதிவாதியோடு முடிந்துவிட்டது மற்ற பிரதிவாதிகளுக்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது

வழக்கானது நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்து வருவதாக எனது தகப்பனார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.

19. அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது 1, 2வது இலக்க சொத்துக்கள் மட்டுமே சேர்க்கப்பட்டது என்றும் பின்னிட்டு 3வது இலக்க சொத்து வழக்கு நிலுவையில் இருந்தபோது சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். 3வது இலக்க சொத்து பூமியில் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார் என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

20. மேற்படி **நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் கோப்புகள் நீ.ம.சா.ஆ. 1 ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

21. நீதிமன்ற ஆணையரின் வரைபடமும், அறிக்கையும் பூமியில் உள்ளவாறு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**முடிவடையும் நேரம்: 02.15 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN
MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.26 10:10:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.